4. தமிழ்நாடு பேருந்து உரிமையாளர்கள்-பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) 1971-ம் ஆண்டு சட்டம் 1971-ம் ஆண்டு டிசம்பர் 4-ம் நாளில்தான் நடைமுறைக்கு வந்தது. இச் சட்டத்தின்படி, பேருந்து உரிமையாளர்களுக்கு அறிவிப்பு தந்து அவர்களது மறுப்புகளை பெற்று அவற்றை பரிசிலித்து அதன்பின் தான் நிருவாகத்தினை அரசுடைமையாக்கிட இயலும். அதே போல், அரசுடைமையாக்கப்படும் நிறுவனங்கள் கம்பெனிகளாகப் பதிவுசெய்து இயங்கிடவும் சில வழிமுறைகளைப் பின்பற்றியாக வேண்டும். எனினும், இந்த வழிமுறைகள் அனைத்தையும் எந்த விதமான தாமதமும், தயக்கமும் இன்றி, உடனடியாக நிறைவேற்றி பேருந்து உரிமையாளர்களது முழு ஒத்துழைப்புடன் மேற்குறிப்பிட்ட 4 பேருந்து நிறுவனங்களை அரசுடைமையாக்கிய இந்த அரசின் வேகமான முயற்சிகளை இந்த மாமன்றம் மகிழ்ந்து வரவேற்கும் என்று உறுதியாக நம்புகிறேன். ஒரே ஒரு பேருந்து உரிமையாளரது பயணிப் பேருந்துகளை மட்டும் இன்னமும் அரசுடைமையாக்கிட இயலவில்லை. இயலாததற்குக் காரணம், தனது பயணிப் பேருந்துகளை ஓட்ட முடியாத நிலையிலிருந்தாலும் அந்த உரிமையாளர் இந்த சட்டத்தை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளயேதாகும்.

உயர் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதினால் அவரது பயணிப் பேருந்துகளை நாட்டுடைமையாக்கிட முடியாவிட்டாலும். அந்த பேருந்து உரிமையாளரது பேருந்து வழித்தடங்களில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை பேருந்துகளை ஓட்டி வருவதோடு, அந்த உரிமையாளரால் பேருந்துகளை ஓட்ட முடியாமல் ஆட்குறைப்புச் செய்து வேலை நீக்கம் பெற்ற தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பளித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

5. போக்குவரத்துப் பணிகள் திறமையாகவும் செம்மையாகவும் நடைபெற, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை பல்வேறு முன்னேற்றங்களை செய்துள்ளது. நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. விரைவுப் பேருந்துகளின் எண்ணிக்கை இந்த ஆண்டின் தொடக்கத்தில் 201-ஆக இருந்ததிலிருந்து மார்ச் திங்களில் 259-ஆக மிகவும் விரைவாக வளர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன். விரைவுப்